கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

27.03.2022 ஞானம் 5 – ஒலி 13









# மனதின் பிரதிபலிப்பே பிரபஞ்சம்

அருட்பணி.சைமன் பீட்டர்


அன்பிற்கினிய ஞான ஒலி வாசக நண்பர்களே, உங்கள் அனைவரையும் நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

ஒரு முறை ஒரு நாட்டின் மன்னன் தன் ஆட்சியில் மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள், அவர்களின் வாழ்க்கைத் தரம் எவ்வாறு இருக்கின்றது, அவர்களுக்கான அத்தியாவசியத் தேவை என்ன என்பதை அறிவதற்காக அந்நாடு முழுவதும் கால்நடையாகவே சென்று பார்த்து வந்தார். காடு மலை என்றும் பாராமல் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வந்தார். பல மாதங்கள் கடந்த பிறகு அவர் தன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.அவர் தன் வாழ்நாளில் முதல்முறையாக இவ்வளவு தூரம் நடந்ததில்லையாதலால் அவர் கால்கள் மிகவும் வலித்தன. ஏனென்றால் அந்நாட்டின் பாதைகள் மிகவும் கரடு முரடாக இருந்தது. கற்களாலும், முட்களாலும் நிறைந்திருந்ததால் அவரின் கால்கள் மிகவும் பாதித்திருந்தது. ஆகவே அரசன் தன் அமைச்சர்களை அழைத்து தன் நாட்டில் உள்ள அனைத்து சாலைகளையும் விலங்குகளின் தோல்களால் மூடவேண்டும் என்று கட்டளையிட்டார். தான் மீண்டும் அங்கு செல்லும் போது பாதை நன்றாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அமைச்சர்கள் மன்னரிடம் அதற்காகப் பல லட்சம் விலங்குகளைக் கொல்ல வேண்டியிருக்கும் மேலும் அது பல காலம் ஆகும். அதிக செலவாகும் என்று சொன்னார்கள். அது அவ்வளவு புத்திசாலித்தனமாக இருக்காது என்று சொல்லி அங்கலாய்த்தார்கள். மன்னர் இவற்றைக் கேட்டுவிட்டு, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை அதைச் செய்யுங்கள் என்று கட்டளை பிறப்பித்தார். அப்போது ஒரு முதிய அமைச்சர், மன்னரிடம், அடுத்த நாள்வரைப் பொறுத்திருங்கள் என்னிடம் இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்று இருக்கின்றது, அதைக் கேட்ட பிறகு உங்கள் முடிவைக் கூறுங்கள் என்று சொன்னார். மன்னரும் சரி என்று ஒத்துக் கொண்டார்.

அடுத்த நாள் அரசவை கூடியது, மன்னர் அந்த முதிய அமைச்சரிடம் உங்களின் மாற்றுத் திட்டம் என்ன என்று கேட்டார். அப்போது அந்த முதிய அமைச்சர் ஒரு பெட்டியைத் திறந்து அதிலிருந்து இயற்கையாகவே இறந்த ஒரு விலங்கின் தோலால் செய்யப்பட்ட இரண்டு காலணிகளை எடுத்து அரசரிடம் கொடுத்து அணியச் சொன்னார். அவரின் கால்களுக்கு அவை சரியாகப் பொறுந்தியது. அப்போது அந்த மன்னர் அந்தக் காலணிகளை அணிந்து இங்கும் அங்கும் நடந்தார். அப்போது அந்த அமைச்சர் இப்போது சற்று வெளியே சென்று நடந்து பாருங்கள் என்றார். அவரும் அவ்வாறே செய்தார். மன்னர் மிகவும் மகிழ்ந்து அந்த அமைச்சரைப் பாராட்டினார். தன் மிதியடியே போதும் என்று அரசர் தன் திட்டத்தை மாற்றிக் கொண்டார்

ஊரைத் திருத்துவதைவிட தன்னைத் திருத்திக்கொள்வதே ஆகச் சிறந்த சீர்திருத்தம். எந்த சீர்திருத்தமும் நம் மனதிலிருந்தே ஊற்றெடுக்க வேண்டும். அதுவே நிரந்தர மேன்மையைத் தரும். இந்தப் பிரபஞ்சம் நம் பிரதிபலிப்பே.



# விவிலியம் அறிவோம் – 31

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## ஈசாக்கின் பிறப்பும் வாழ்வும்


ஆண்டவர் பல வாக்குறுதிகளை ஆபிரகாமுக்கு அளித்திருந்த போதும் அவருக்குத் தன் மனைவி சாரா மூலமாகப் பிள்ளைகள் பிறக்கவில்லை. தனது எண்பத்தாறாவது வயதில் சாராயின் பணிப்பெண் ஆகார் மூலமாக இஸ்மயேலை மகனாகப் பெறுகின்றார். ஆபிரகாமுக்குத் தொண்ணூற்றொன்பது வயதாகும்போது மீண்டும் ஆண்டவர் ஆபிரகாமிடம் நான் சாராவுக்கு ஆசி வழங்குவேன் அவள் வழியாக உனக்கு ஒரு மகனையும் தருவேன் அவனுக்கு நீ ஈசாக்கு எனப் பெயரிடுவாய். அவனுடனும் அவனுக்குப் பின் வரும் அவன் வழிமரபினருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலைநாட்டுவேன் (தொநூ 17:16-19) என்கின்றார். விவிலியத்தில் பிறப்பதற்கு முன்னமே கடவுளால் பெயர் சூட்டப்பட்டவர்களில் ஈசாக்கும் ஒருவர். அவரைத் தவிர பழைய ஏற்பாட்டில், இஸ்மயேல், சாலமோன், யோசியா, எசாயாவின் மகன் போன்றோரும் புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவான், இயேசு ஆகியோரும் பிறப்பதற்கு முன்பே பெயர்களைப் பெறுகின்றனர். ஆபிரகாமுக்கு நூறு வயது ஆகும்போது அவரது மனைவி சாரா வழியாக ஈசாக்கு பிறக்கின்றார். ஈசாக்கின் பிறப்பு வழியாக ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று நிறைவுக்கு வருகிறது. ஈசாக்கு பிறந்த எட்டாவது நாள் விருத்தசேதனம் செய்யப்படுகின்றார். அவ்வாறு எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்யப்படுவது ஆபிரகாம் ஆண்டவர் தன்னுடன் செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதைக் காட்டுவதாக உள்ளது. மேலும் ஈசாக்கின் பிறப்புடன் சிரிப்பு தொடர்புபடுத்தப்படுகிறது. ஏனெனில் ஈசாக்கு பிறந்தபோது அவரது தாய் சாரா கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சிரிப்பர் (தொநூ 21:6) என்றும் கூறுகின்றார்.

ஈசாக்கு வளர்கின்றான். பால்குடி மறந்த நாளன்று ஆபிரகாம் பெரியதொரு விருந்து அளிப்பதாகஆசிரியர் பதிவு செய்கின்றார். ஈசாக்கின் பிறப்பு குடும்பத்தில் சில பிரச்சினைகளையும் கொண்டு வருகிறது. ஆகார் பெற்றெடுத்த இஸ்மயேல் தனது மகனான ஈசாக்குடன் சிரித்து விளையாடுவதை சாராவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகாரையும் இஸ்மயேலையும் வீட்டை விட்டே துரத்திவிடுகிறார். ஈசாக்கின் குழந்தைப்பருவ வாழ்வு பற்றிய பதிவுகள் எதுவும் விவிலியத்தில் இல்லை. குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவத்திற்கு கடந்த ஈசாக்கு கடவுளுக்கு விருப்பமானவராக, உடன்படிக்கையின் உரிமையாளர் என்பதை உணர்ந்தவராக வளர்ந்தார் எனக் கருதலாம். ஈசாக்கு இளைஞனாக இருந்தபோது ஆண்டவர் ஆபிரகாமின் நம்பிக்கையைச் சோதிக்கின்றார். ஆண்டவர் ஆபிரகாமின் நம்பிக்கையைச் சோதிப்பதற்கு ஈசாக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றார். ஆண்டவர் ஆபிரகாமிடம்ஈசாக்கை எரி பலியாக பலியிடக் கேட்கின்றார். விவிலியத்தில் வருகின்ற கதைகளுள் ஒரு உன்னதமான, சிறப்பான கதையாக இந்தக் கதை உள்ளது.வரலாற்று அறிஞர் யோசேப்புஸ் கருத்துப்படி ஈசாக்கிற்கு இருபத்தைந்து வயது ஆகும்போது ஆபிரகாம் அவரை பெயர்செபாவிலிருந்து மோரியா

மலைப்பகுதிக்கு அவரைக் கடவுளுக்கு எரிபலியாக பலியிடுவதற்காக அழைத்துச் செல்கின்றார்.

பொதுவாக இந்த நிகழ்வை வாசிக்கும் போதெல்லாம் ஆபிரகாம் ஆண்டவர் மேல் கொண்டிருந்த நம்பிக்கைதான் நமது நினைவுக்கு வருகிறது. தான் மிகவும் அன்பு செய்த ஒரே மகனான ஈசாக்கைப் பலியிடவும் ஆபிரகாம் தயங்கவில்லை. ஆனால் ஈசாக்கை நாம் மறந்துவிடக்கூடாது. ஈசாக்கு தன் தந்தையின் மீது முழு நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார். ஒரு பலிப்பொருளாக கடவுளுக்குத் தன்னை பலியாக ஒப்புகொடுக்க முழு சம்மதத்தையும் தருபவராக வருகின்றார் (தொநூ 22:12; 26:5; எபிரே 11:17). ஈசாக்கின் இந்தச் செயல் நமது பாவங்களுக்காகத் தன்னையே பலியாகத் தந்த இயேசுவின் ஒரு மாதிரியாக அவரை வெளிப்படுத்துகிறது. கடவுளுக்காகப் பலியாகத் தயாராக இருந்த அந்த நாள்முதல் ஈசாக்கு கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மனிதராக மாறுகின்றார். பண்டைய மேற்காசிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் மத்தியில் நரபலி அதாவது மனிதர்களைப் பலிகொடுப்பது வழக்கத்தில் இருந்தது. இஸ்ரயேல் மக்கள் மத்தியில் நரபலி கொடுப்பது விலக்கப்பட்ட ஒன்றாக இருந்தது என்றாலும் அவர்கள் மத்தியிலும் நரபலி கொடுக்கும் பழக்கம் இருந்தது என்பதற்கு விவிலியத்தில் பல ஆதாரங்கள் உள்ளன (1அரசர் 16:34; 2 அரசர் 3:27; 23:10). ஆண்டவர் அபிரகாமிடம் தனது மகனான ஈசாக்கை எரிபலியாகத் தனக்குப் பலியிடக் கேட்பதும், இறுதியில் ஆபிரகாமைத் தடுத்து ஆடு ஒன்றைப் பலியிட வைப்பதும்,நரபலி கொடுக்கும் பழக்கத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட கதையாகவும் இந்தக் கதை இருக்கலாம் என எண்ண வைக்கிறது.

ஆபிரகாமின் மனைவியும் ஈசாக்கின் தாயுமான சாராதனத நூற்றிருபத்தேழாவது வயதில் இறக்கிறார். சாரா இறக்கும்போது ஈசாக்கிற்கு முப்பத்தாறு வயது. ஆபிரகாம் கானான் நாட்டிலுள்ள எபிரோன் என்ற கிரியத்து அர்பா என்ற நகரில் இருக்கும்போது சாரா இறக்கின்றார். ஆபிரகாம் தனது மனைவியை அடக்கம் செய்வதற்காக மம்ரே




அருகில் இத்தியர்கள் வாழ்ந்துவந்த பகுதியில் இத்தியரான எப்ரோன் என்பவருக்குச் சொந்தமான மக்பேலா குகையை நானூறு வெள்ளிக்காசுகள் கொடுத்து கல்லறை நிலத்திற்காக வாங்குகிறார். அங்கே தனது மனைவி சாராவை அடக்கம் செய்கின்றார். பிற்காலத்தில் தனது நூற்றெழுபத்தைந்தாவது வயதில் ஆபிரகாம் இறந்தபோது மக்பேலா குகையில்தான் அடக்கம் செய்யப்படுகின்றார் (காண் தொநூ 25:9). சாரா இறந்தபின் ஆபிரகாம் தன் மகனான ஈசாக்கிற்கு திருமணம் செய்துவைக்க விரும்புகின்றார். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றார். கானான் நாட்டுப் பெண்களில் எவரையும் ஈசாக்கிற்கு மணமுடிக்க விரும்பவில்லை; மாறாக தனது சொந்த நாட்டிற்குச் சென்று அவரது உறவினர்களில் ஒரு பெண்ணை ஈசாக்கிற்கு மணமுடிக்க விரும்புகின்றார். அவருக்கு வயதாகிவிட்டதால் அவருடைய வேலைக்காரர்களில் மூத்தவரும், தமக்குரிய அனைத்திற்கும் அதிகாரியுமானவரிடம் ஈசாக்கிற்கு பெண் பார்க்கும் பணியை ஒப்படைக்கின்றார். ஆபிரகாம் ஈசாக்கிற்கு ஏன் கானானியப் பெண் ஒருத்தியை மணமுடிக்க விரும்பவில்லை என்ற கேள்வி எழலாம்.இப்பகுதி எழுதப்பட்ட காலத்தில் யூதர்கள் வேறு கடவுள்களை வழிபடும் மக்களுடன் கலப்பதை விரும்பவில்லை. அதை பிரதிபலிப்பதாகத்தான் இந்தக்கதை உள்ளது என பல அறிஞர்களும் கருதுகின்றனர். மேலும் எந்தச் சூழ்நிலையிலும் ஈசாக்கை ஆபிரகாமின் சொந்த நாட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகக்கூடாது என்றும் ஆபிரகாம் தனது வேலையாளுக்குக் கட்டளையிடுகின்றார். கானான் நாட்டை ஆண்டவர் ஆபிரகாமின் வழிமரபினருக்குத் தருவதாக வாக்களித்திருக்கின்றார். எனவே ஈசாக்கு அங்கிருந்து செல்வது வாக்களிப்பட்ட

நாட்டிலிருந்து திரும்பிச்செல்வதாகக் கருதப்படலாம்.

ஆபிரகாமின் வேலைக்காரர் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செய்வதற்காக ஆரான் நோக்கி பயணம் செய்கின்றார். ஈசாக்கிற்கு ஏற்ற ஒரு மனைவியைத் தேடுவது மட்டுமே அவரது நோக்கமாக இருக்கிறது. ஆரானை அடையுமுன் நகருக்கு வெளியில் உள்ள ஒரு நீரூற்றிற்கு அருகில் வந்தபோது தன்னுடைய வருகையின் நோக்கம் நிறைவேறுவது கடவுள் கையில்தான் உள்ளது என நம்பியவராக, கடவுளிடம் ஒரு அடையாளம் கேட்கின்றார். நீரூற்றுக்கு தண்ணீர் இறைக்க வருபவர்களில் தனக்கும் தன்னுடைய ஒட்டகங்களுக்கும் குடிக்க தண்ணீர் கொடுக்கும் பெண்தான் ஈசாக்கிற்கு கடவுளால் குறிக்கப்பட்ட பெண் என முடிவு செய்கின்றார். தாராள குணமும்,கடின உழைப்பும் கொண்ட பெண்தான் ஒட்டகங்களுக்குத் தேவைப்படுகின்ற ஏராளமான தண்ணீரை இறைத்துத் தரமுடியும். ஆபிரகாமின் வேலையாள் இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கையில் ரெபேக்கா தண்ணீர் இறைக்க வருகின்றார். ஆபிரகாமின் வேலையாள் ரெபேக்காவிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கின்றார். ரெபேக்கா அவருக்குக் குடிப்பதற்கு மட்டுமல்ல அவருடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் இறைத்துத் தருகின்றார். ஆபிரகாமின் வேலையாள்தன் மனதில் கொண்டிருந்த சிந்தனைகளை அறியாமலேயெ ரெபேக்கா அவருக்கும் அவருடைய ஒட்டகங்களும் தேவையான தண்ணீரை இறைத்துத் தருகின்றாள். ஆபிரகாமின் வேலையாள் எண்ணியிருந்த அடையாளம் அவருக்குக் கிடைத்துவிடுகிறது. ரெபேக்காதான் ஈசாக்கிற்கு கடவுளால் குறிக்கப்பட்ட பெண் என நினைத்து அவளுக்குச் சில தங்க நகைகளை நன்கொடையாகக் கொடுக்கின்றார்.

அதன்பின் அவளைப் பற்றி விசாரிக்கையில் அவள் ஆபிரகாமின் சகோதரி மகள் என்பதையும் அறிந்துகொண்டு,அவர்களின் வீட்டில் தங்குவதற்கு இடம் கிடைக்குமா? என வினவுகின்றார். ரெபேக்காவும், எங்கள் வீட்டில் வைக்கோலும் தீவனமும் மிகுதியாக இருப்பதுமன்றி, தங்குவதற்கு இடமும் உண்டு எனப் பதிலளிக்கின்றார். ரெபேக்கா தனது தாயின் வீட்டிற்குச் சென்று அங்குள்ளோருக்கு நடந்தது அனைத்தையும் கூறுகின்றார். ரெபேக்கா அணிந்துவந்த பொன் நகைகளைக் கண்டும், ரெபேக்கா கூறியதைக் கேட்டும் லாபான் நீரூற்றிற்குச் சென்று அபிரகாமின் வேலையாளையும் அவருடன் வந்தவர்களையும் அழைத்துவருகிறார். ஆபிரகாமின் வேலையாள் அங்கே மதிப்புடன் நடத்தப்படுகிறார். அவர் லாபானுடன் அமர்ந்து உண்பதற்குமுன் தனது தலைவரான ஆபிரகாம் அவருக்குக் கொடுத்த பணியையும், ஆரானுக்கு வந்தபோது அவருடைய மனதில் எழுந்த எண்ணங்களையும், எவ்வாறு ரெபேக்கா அந்த




அடையாளங்களை நினைவேற்றினார் என்பதையும் கூறி ரெபேக்காவை ஈசாக்கிற்கு மனைவியாகக் கேட்கிறார். ரெபேக்காவின் தந்தை அதற்கு முன்னமே இறந்திருக்க வேண்டும். ஏனெனில் அங்கு நடக்கும் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் ரெபேக்காவின் சகோதரனான லாபானுடன் நடக்கிறது. ஆபிரகாமின் வேலையாள் கூறியது அனைத்தையும் கேட்ட லாபானும் அவரது தாயும், இச்செயல் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது. நாங்கள் உம்மிடம் இதற்குச் சாதகமாகவோ பாதகமாகவோ ஒன்றும் சொல்லக் கூடாது எனக் கூறி ரெபேக்காவை ஈசாக்கிற்கு மனைவியாக அழைத்துச் செல்ல அனுமதிக்கின்றனர். ஆபிரகாமின் வேலையாள் தான் வந்த காரியம் விரைவில் நடந்ததற்கு ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றார்; அவரைத் தொழுகின்றார். ரெபேக்காவுக்கு பொன் வெள்ளி நகைகளையும், ஆடைகளையும், வாபானுக்கும் அவருடைய தாய்க்கும் விலையுயர்ந்த பொருள்களையும் அன்பளிப்பாகக் கொடுக்கின்றார். இந்த ஆபரணங்களும் விலையுயர்ந்த பொருள்களும் பெண் வீட்டாருக்குக் கொடுக்கவேண்டிய அன்பளிப்புகளாகவும் இருக்கலாம்.

திருமணப் பேச்சுவார்த்தைகள் முடிந்தபின் ஆபிரகாமின் வேலையாளும் அவருடன் வந்தவர்களும் அங்கே உண்டு குடித்து மகிழ்கின்றனர். லாபானும் அவருடைய தாயும் ஆபிரகாமின் வேலையாளும் அவருடன் வந்தவர்களும் அங்கே சிலநாள்கள் தங்கிவிட்டுச் செல்லவேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் ஆபிரகாமின் வேலையாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே தன் தலைவரிடம் திரும்பவேண்டும் என விரும்புகிறார். அவருடைய விருப்பப்படி ரெபேக்காவையும் அவருக்குத் தோழியராகக் கொடுக்கப்பட்ட பெண்களையும் அழைத்துக்கொண்டு தனது தலைவரான ஆபிரகாமின் இடத்திற்குச் செல்கிறார். ஆபிரகாமின் வேலையாள் ஈசாக்கிற்குப் பெண் பார்ப்பதற்காக காரான் சென்றிருந்த காலத்தில் ஈசாக்கு தான் வாழ்ந்து வந்த பெயேர் லகாய்ரோயி என்ற இடத்திலிருந்து புறப்பட்டு நெகேபு என்ற இடத்தில் குடியேறுகின்றார். ஒரு நாள் மாலை நேரத்தில் வயல்வெளியில் சென்றபோது ஆபிரகாமின் வேலையாளும் அவருடன் ரெபேக்காவும் வருவதைக் காண்கின்றார். ரெபேக்காவும் ஈசாக்கைப் பார்க்கின்றார். அவர் யார் என அறிந்து கொள்வதற்காக வயலில் நம்மைச் சந்திக்க வந்து கொண்டிருக்கும் அவர் யஸர்? என வேலையாளிடம் கேட்கின்றார். அவர்தாம் என் தலைவர் என வேலையாள் கூறுகிறார். அவருடைய இந்தப் பதில் புதிராக உள்ளது. ஏனெனில் ஆபிரகாம்தான் அவரது தலைவர். ஒருசில அறிஞர்கள், ஆபிரகாமின் பணியாள் பெபேக்காவை அழைத்து வந்தபோது ஆபிரகாம் இறந்திருக்கவேண்டும். எனவேதான் ஈசாக்கைத் தனது தலைவர் எனக் கூறுகின்றார் எனக் கருதுகின்றனர். அவர்தாம் என் தலைவர் என வேலையாள் கூறக்கேட்டதும் ரெபேக்கா தம் முக்காட்டை எடுத்து தம்மை மூடிக்கொண்டார் என வாசிக்கிறோம்.இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவதாக,பண்டைய வழக்கப்படி திருமணம் ஆவது வரை மணமகன் மணமகளைச் சந்திக்கக் கூடாது என்ற பழக்கம் இருந்தது. இரண்டாவது, நான் மணமகளாக வருகிறேன் என்ற செய்தியை ஈசாக்கிற்கு அறிவிப்பதாகவும் கருதலாம். ஈசாக்கு ரெபேக்காவை திருமணம் செய்து, அன்பு செய்வதுடன் இந்தக் கதை முடிவுக்கு வருகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலைக்ஸ்** CMF





# மறையுரை


அருட்பணி. ஜஸ்டின் சேவியர் ராஜ்

பங்குத்தந்தை,

உடுமலைப்பேட்டை, கோவை மறைமாவட்டம்.


## தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

**27-03-2022**

**யோசுவா 5 : 9,10 - 12 / 2 கொரி. 5 : 17-21 / லூக். 15 : 1-3, 11-32**

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே தாய் திருச்சபை இன்று தவக்காலத்தின் நான்காம் ஞாயிற்றுக் கிழமையை சிறப்பிக்கின்றது. தவக்காலத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமையானது அக்களிப்பின் ஞாயிறு அல்லது மகிழ்ச்சியின் ஞாயிறு என்று சிறப்பிக்கப்படுகின்றது. இன்றைய மூன்று வாசகங்களும் இந்த மகிழ்ச்சியை எடுத்துச் சொல்வதாக அமைந்திருக்கின்றன. தவக்காலத்தில் இறுதிநாட்களில் இருந்து கொண்டிருக்கிற நமக்கு எது உண்மையில் மகிழ்ச்சி என்றால் அனைவரும் ஏக மனதோடு சொல்வோம். நம் பாவங்களுக்கு மன்னிப்புதான் உயர்ந்த மகிழ்ச்சியாகும். எனவே உண்மையான மகிழ்ச்சி என்ன அதை எவ்வாறு அடையலாம் என்று இன்றைய வாசகங்களின் அடிப்படையில் சிந்திப்போம். எதையும் இழக்காமல் கிடைக்கின்ற மகிழ்ச்சியை விட ஒன்றை இழந்துவிட்டு அந்த இழப்பின் வேதனையை அனுபவித்து பிறகு இழந்ததை அடைகின்ற போது அதிக மகிழ்ச்சியை அடையலாம்.

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ராயேல் மக்கள் கானான் தேசத்தின் நிலத்திலிருந்து பெற்ற விளைச்சலை அனுபவித்து ரசித்து உண்பதால் அடைகின்ற மகிழ்ச்சியானது சொல்லப்பட்டிருககின்றது. துவக்கத்தில் அந்த இஸ்ராயேல் மக்கள் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு இறைவனுடைய அற்புதங்களால் ஆச்சரியங்களால் வழிநடத்தப்பட்டார்கள். ஆனால் இறைவனுடைய வழிநடத்துதலை புறக்கணித்து மற்ற நாட்டினரைப் போல ஒரு அரசனால் வழிநடத்தப்பட விரும்பினார். கடவுளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். கடவுள் அவர்கள் விருப்பத்திற்கே அவர்களை விட்டுவிட்டார். விளைவு மனிதர்களால் ஏமாற்றப்பட்டு அடிமைகளாக மாறினர். பின்னர் விடுதலை பெற்று மீண்டுமாக இறைவனின் அன்பு அரவணைப்புக்கு வந்த அவர்கள், பாலும் தேனும் பொழிகின்ற கானான் தேசத்தில் கால் மிதித்து அங்கு அறுவடை செய்த தானியத்தை உண்கின்ற போது அடைகின்ற மகிழ்ச்சியை இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கிறோம். இன்றைய இரண்டாவது வாசகத்தில் பாவத்தினால் இறைவனின் அன்பு உறவிலிருந்து அறுபட்டு மனிதன், இயேசுவின் தியாக தற்கையாப்பினால் அறுபட்ட இறைமனித உறவு புதுப்பிக்கப்படுவதால் ஏற்பட்ட மகிழ்ச்சியை இன்றைய இரண்டாவது வாசகம் எடுத்துரைக்கின்றது.

இன்றைய நற்செய்தியில் ஊதாரி மகனுடைய உவமை வாயிலாக இறைவனின் அன்பையும் மனிதனின் சுயநலத்தையும் எப்போது உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும் என்பதையும் பார்க்கிறோம். ஊதாரி மகனான இளையமகன் தன் தந்தையிடம் இருந்து முழுமையாக விலகி வாழ விரும்புகிறான். தந்தையை உடலாலும் உள்ளத்தாலும் வெறுக்கிறான். ஆனால் தந்தை தன் துன்பத்தை பெரிதுபடுத்தாமல் தன் மகனின் விருப்பத்திற்கு செவிமடுக்கிறார். தன் வேதனையைவிட தன் மகனின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்று கருதுகிறார். இளைய மகன் ஊதாரித்தனமாக வாழ்ந்தபின் தன் சுயநினைவை அடைகிறான். அதுபோல தவக்காலத்தில் இருக்கிற நாம் நம் வாழ்க்கைப் பாதையை அலசிப் பார்ப்போம். இறைவனுக்கும், நமக்கும், நம் அயலானுக்கும் இடையே உள்ள உறவை புடமிடுவோம். உறவுகளை புதுபிப்போம், உண்மையான மகிழ்ச்சியை அடைவோம்.

ஆமென்.



# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

யோசுவா 5 : 9, 10-12, 2 கொரி. 5 : 17-21,
லூக். 15: 1-3, 11-32

**27-03-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

அளவு கடந்த அன்பு கொண்டுள்ள இறைவனோடு ஒப்புரவாகி, புதிதாய் படைக்கப்பட்டவர்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் மகிழ்ச்சி அல்லது அக்களிப்பு ஞாயிறு என்று அழைக்கப்படும் தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நாம் நம்முடைய பலவீனங்களை உணர்ந்து திருந்தி, ஆண்டவரிடம் சரணடைந்தால் அவரது பேரன்புக்கு உரியவர்களாவோம் என்பது உறுதி என்ற சிந்தனையை வழங்குகிறது இன்றைய வழிபாடு.

வாழ்வில் இதுவரை நாம் பெறாத ஒன்றைப் பெறும்போது அடையும் மகிழ்வு பெரிதா? அல்லது, வாழ்வில் நாம் இழந்ததை மீண்டும் பெறும்போது அடையும் மகிழ்வு பெரிதா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

இறைவனின் எல்லையில்லா பேரன்பை உணர்ந்து, அவரைப்போல் நாமும் பிறரை நேசிக்கவும், மன்னிக்கவும் பரிவு கொள்ளவும் வழிகாட்டுகிறது இன்றைய திருப்பலி.

நாம் மனம் திருந்தி திரும்பி வந்த இளைய மகனைபோல் இருக்கிறோமா? அல்லது திருந்தி வந்த தம்பியை மன்னித்து ஏற்றுக் கொள்ள மனமில்லாத அண்ணனைப் போல் இருக்கிறோமா? என்பது குறித்து நமக்குள் ஒரு உள்முகத் தேடலை நடத்துவோம்.

நாம் இறைவனின் எல்லையில்லா அன்பைப் பெற்று வாழவும், பாவத்தால் அவரைவிட்டு விலகிச் சென்ற நாம் திருந்தி திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டு இறைவனோடு ஒன்றித்து வாழவும் வரம் வேண்டி பாஸ்கா என்ற இத்திருப்பலியில் மகிழ்வுடனும் அக்களிப்புடனும் பக்தியுடனும் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேலர் யோசுவாவின் தலைமையில் யோர்தான் ஆற்றைக் கடந்து கானான் நாட்டை சென்றடைந்ததும். முதன் முதலாக பாஸ்கா விழாவையும் புளிப்பற்ற அப்பத் திருவிழாவையும் கொண்டாடியதை விளக்குகிறது இன்றைய முதல் வாசகம். பழையன கழிந்து, புதியன புகுந்து, புதுவாழ்வு தொடங்குவதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்து வழியாக நாம் புதிய படைப்பாக மாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை எடுத்துரைத்து தந்தையாம் கடவுள் நமது குற்றங்களைப் பொருட்படுத்தாமல், ஆண்டவரான இயேசுவின் வழியாக நம்மை அவரோடு ஒப்புரவாக்கினார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறார் திருத்தூதர் பவுல். நாம் தந்தையாகிய கடவுளுடன் ஒப்புரவாகி, கிறிஸ்துவின் வழியில் புதுப்படைப்பாக வாழ அழைக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

1) அருளின் ஊற்றான தந்தையே இறைவா, உலக மாந்தரை உம்மோடு ஒப்புரவாக்கும் திருப்பணியை ஆற்றி வரும் உம் திருத்தூதர்களான எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட் தந்தையர், அருட்கன்னியர் அனை வரையும் நிறைவாக ஆசீர்வதியும், உமது மீட்பை எடுத்துரைக்கும் கருவி களாக இருக்கும் அவர்கள் தங்களது திருப்பணியில் மனஉறுதியோடு உழைக்க அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாக பொழிந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

2) மன்னிப்பதில் தாராள குணம் கொண்ட அன்பு இறைவா, எலியாவின் இறைவாக்கினைக் கேட்டுத் திரும்பி வந்த ஆகாபு அரசனைப்போல், நாத்தா னின் உரை கேட்டு திருந்தி திரும்பி வந்த தாவீதைப்போல், தன் தவறை உணர்ந்து திரும்பி வந்த பேதுருவைப்போல், தன் தீய செயல்களை எண்ணி மனம் வருந்தி தன் தந்தையிடம் திரும்பி வந்த இளைய மகனைப் போல் நாங்களும் எங்கள் பாவங்களை எண்ணி மனம் வருந்தி உம்மிடம் திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டு, உம்மோடு ஒப்புரவாகி உமது அன்பு மக்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) புதுப்படைப்பின் தந்தையாகிய இறைவா, திருமுழுக்கின் வழியாக உம் மோடும் உம் திருமகன் கிறிஸ்துவோடும் ஒன்றித்ததன் மூலம் புதுப்படைப்பின் பிள்ளைகளாய் விளங்கும் நாங்கள் பாவம் நிறைந்த பழைய வாழ்வை விட்டகன்று, பழிச்சொல் நீக்கப்பட்ட புதுவாழ்வு வாழவும், நாங்கள் உம்மோடும் சகமனிதரோடும் ஒப்புரவாகி உறவுகளைப் புதுப்பித்து விண்ணரசின் விருந்தில் பங்கு கொள்ளும் பாக்கியம் பெற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) எல்லோருக்கும், எல்லாமுமாய் இருக்கின்ற அன்பு இறைவா, அரசு தேர்வு எழுதப்போகும் எம் பங்கின் அனைத்து மாணவ மாணவியர்களை யும் உம் பாதத்தில் வைக்கின்றோம். பயம், கவலை, மறதி போன்ற தீய சக்தி களிடமிருந்து அவர்களை விடுவித்து, ஞானத்தோடு செயல்படவும், உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று நல்ல எதிர்காலம் அமைந்திடவும் உம் ஆவியின் வல்லமையை அவர்கள் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



## திரு.வி.க.வின்
## கிறிஸ்து மொழிக் குறள்



**தோழர்க்குத் தொண்டுசெயத் தூண்டுமே உள்ளத்தை**
**ஆழி அருட்சொல் அரண்.**

நண்பருக்கு பயன் எதிர்பாராது பணி செய்ய மனத்தைத் தூண்டு தல் செய்யும் கடல் போன்ற மலை அருளுரை பாதுகாவல் ஆகும்.

தொண்டு – பயனெதிர் பாராது பணி செய்தல். ஆழி – கடல், அரண் – பாதுகாவல்

# வத்திக்கான் செய்திகள்



## அன்பால் மட்டுமே மனித குடும்பத்தை காப்பாற்ற இயலும்

கல்வி பற்றி நினைக்கின்றபோது சிறார் மற்றும் இளையோர்பற்றி நினைக்கின்றோம், இப்போது போர்முனையில் நிற்க அனுப்பப்படும் பல இளம் இரஷ்ய மற்றும், உக்ரைன் படைவீரர்களை நினைக்கின்றோம்.

– திருத்தந்தை பிரான்சிஸ்

இளையோருக்கு, சனநாயகம் மற்றும், அன்புக் கலாச்சாரம் ஆகியவற்றின் பாதையைக் கற்றுக்கொடுக்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றுமாறு, Gravissimum Educationis பாப்பிறை அமைப்பு நடத்திய பன்னாட்டு கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பிளவுபட்டுள்ள ஓர் உலகில், சனநாயகத்தைக் கற்றுக்கொடுத்தல் என்ற தலைப்பில் இவ்வமைப்பு நடத்திய இக்கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ நூறு பிரதிநிதிகளை, மார்ச் 18, இவ்வெள்ளியன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, அழிவின் பாதை கழிவுகளையே உற்பத்திசெய்யும், மாறாக அன்பால் மட்டுமே மனிதக் குடும்பத்தை காப்பாற்ற இயலும் என்று கூறினார்.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் குறித்து முதலில் பேசிய திருத்தந்தை, தொலைவில் நடைபெறும் போர்கள் குறித்த செய்திகளைக் கேட்பதில் நாம் பழக்கப்பட்டுவிட்டோம், ஆனால் இப்போது நமக்கு நெருங்கிவந்துள்ள போர், மனித இயல்பு எவ்வளவு கொடூரமானது என்பதை சிந்திக்க வைத்துள்ளது என்று கூறினார்.

கல்வி பற்றி நினைக்கின்றபோது சிறார் மற்றும் இளையோர்பற்றி நினைக்கின்றோம், போர்முனையில் நிற்க அனுப்பப்படும் பல இளம் படைவீரர்களை, இளம் இரஷ்ய படைவீரர்களை, இளம் உக்ரைன் படைவீரர்களை, போர்ப் பகுதிக்கு அருகில் வாழ்கின்ற இளையோரை, சிறுவர் சிறுமியரை நினைக்கின்றோம் என்று, அவர்கள்மீது இரக்கம்கொண்டு திருத்தந்தை கூறினார்.

### நியாயமான போர்கள் என்று எதுவுமில்லை

போர் இடம்பெறும் இவ்வேளையில், கிறிஸ்தவனாகிய நான் என்ன செய்கிறேன்?, செபிக்கின்றேனா?, உண்ணாநோன்பு இருக்கின்றேனா? தவம் செய்கின்றேனா? அல்லது எதைப்பற்றியும் அக்கறை இல்லாமல் வாழ்கின்றேனா? என்பதை சிந்தித்துப் பார்க்குமாறு அழைப்புவிடுத்த திருத்தந்தை, உரோம் பம்பினோ இயேசு சிறார் மருத்துவமனையில் குண்டுகளால் காயமடைந்த சிறார் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

எந்தவொரு போரும் எப்போதுமே மனித சமுதாயத்தின் தோல்வியே என்று திரும்பத் திரும்பக் கூறியத் திருத்தந்தை, கல்வித்துறையில் பணியாற்றும் கல்வியாளர்களாகிய நாம் இந்தப் போரால் தோல்வியடைந்துள்ளோம், ஏனெனில் இதற்கு நாமும் ஒருவகையில் பொறுப்பு என்றும், நியாயமான போர்கள் என்று எதுவுமே இல்லை என்றும் கூறினார். கடவுளின் பணியில் நாம் அனைவரும் ஒத்துழைப்பாளர்கள் என்றுரைத்த திருத்தந்தை, அழிவின் பாதையை எளிதில் எடுக்கலாம், ஆனால் அது பெரும் சேதங்களையே கொணரும் என்றும் கூறினார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## தவக்காலத்தின் முதல் ஞாயிறு

**20.03.2022 – ஞாயிற்றுக்கிழமை**

**முதல் வாசகம்** : வி. பயணம் 3: 1-8,13-15
**இரண்டாம் வாசகம்** : 1 கொரி 10: 1-6,10-12
**நற்செய்தி** : லூக்கா 13: 1-9

**21.03.2022 – திங்கட்கிழமை**

**முதல் வாசகம்** : 2 அரசர்கள் 5: 1-15
**நற்செய்தி** : லூக்கா 4:24-30

**22.03.2022 – செவ்வாய்கிழமை**

**முதல் வாசகம்** : தானியேல் 1: 2, 11-19
**நற்செய்தி** : மத்தேயு 18:21-35

**23.03.2022 – புதன்கிழமை**

**முதல் வாசகம்** : இணைச்சட்டம் 4: 1,5-9
**நற்செய்தி** : மத்தேயு 5:17-19

**24.03.2022 – வியாழக்கிழமை**

**முதல் வாசகம்** : எரேமியா 7: 23-28
**நற்செய்தி** : லூக்கா 11:14-23

**25.03.2022 – வெள்ளிக்கிழமை**

**முதல் வாசகம்** : எசாயா 7: 10-14; 8: 10b
**இரண்டாம் வாசகம்** : எபிரேயர் 10: 4-10
**நற்செய்தி** : லூக்கா 1:26-38

**26.03.2022 – சனிக்கிழமை**

**முதல் வாசகம்** : ஓசேயா 6: 1-6
**நற்செய்தி** : லூக்கா 18:09-14

**"Unless there is Good Friday in your life, there can be no Easter Sunday."**

- Fulton J. Sheen -






# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

அதிகாரம் 13
அடக்கமுடைமை
குறள் - 126

வலிமை உடையவரைவிடப் பொறுமை உடையவரே மேலானவர்; நகரை அடக்குகிறவரை விடத் தன்னை அடக்குகிறவரே சிறந்தவர்.

நீதிமொழிகள் 16:32

பொருள்: ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனனால் அஃது அவனுக்கு பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

தன்னைத் தானே கட்டுப்படுத்துகிறவர் பிறருக்கு நன்மை செய்வதிலேயே கருத்தாக இருப்பர். அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தாழ்மையின், கீழ்படிதலின், பணிவின் மனநிலை. இது பிலிப்பியர் இரண்டாம் அதிகாரத்தில் தெளிவாக தரப்பட்டுள்ளது

மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை. (மத்தேயு நற்செய்தி 11:11)

ஐம்புலன்களை அடக்கியாண்டவர்கள் இறைவாக்கினர்கள். இவர்கள் இயேசுவின் பிறப்பை முன்மொழிந்தவர்கள். அதில் குறிப்பாக திருமுழுக்கு யோவான் போல் பெரியவர் எவரும் தோன்றியதில்லை என மத்தேயு 11: 11 ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே கூறுகின்றார்

பர்த்தலமேயு தோல் உரிக்கப்பட்டு தலை வெட்டுண்டு இறந்தார். மத்தேயு கோடாரியால் வெட்டி இறந்தார். தோமா ஈட்டியால் குத்தப்பட்டு இறந்தார். அல்பேயுவின் மகன் யாக்கோபு சிலுவையில் அறையப்பட்டு கல்லாலும் தடியாலும் அடியுண்டு மரித்தார். யூதா ததேயு சிலுவையில் அறையப்பட்டார். தீவிரவாதியாய் இருந்த சீமோன் சிலுவையில் அறையப்பட்டார். யூதாசு இஸ்காரியோத்துக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியா கல்லால் அடிக்கப்பட்டு, தலைவெட்டு இறந்தார். இவ்வாறு இயேசு தேர்ந்தெடுத்த 12 திரு தூதர்களும் இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்குப்பின் உலகெங்கும் சென்று ' இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் ' என்பதற்கு சாட்சிகளாய் விளங்கி, நற்செய்தி அறிவித்து சாட்சிகளாக மரித்தனர். சீடர்கள் பற்றிய செய்திகளைப் புதிய ஏற்பாட்டு நூலாகிய திருத்தூதர் பணிகள் நமக்கு எடுத்துரைக்கிறது.

அவர்களுடைய மரணமும் மிகப்பெரிய சாட்சியாக இரண்டாயிரம் வருடங்கள் ஆகியும், இன்று வரை தலைமுறை தலைமுறையாக பேசப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது. இவர்களுடைய மரணங்கள் அனைவரையுமே அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாகியிருக்கிறது என்றால் அது மிகையில்லை. அதில் பேதுரு என்னும் சீமோன் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இருக்கிறார். செபதேயுவின் மகன் யாக்கோபு தலை வெட்டப்பட்டு இறந்தார். செபதேயுவின் மகன் யோவான் வயது முதிர்ந்து இறந்தார். இயற்கை மரணம் எய்திய ஒரே திருத்தூதர் இவர்தான். அடுத்ததாக அந்திரேயா எக்ஸ் வடிவ சிலுவையில் அறையப்பட்டார். பிலிப்பு சிலுவையில் அறையப்பட்டார்.

கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்.

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு

இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,

சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.

எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்;

தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

(பிலிப்பியர் 2:5-11)

இறைமகன் இயேசு மனித அவதாரம் எடுத்தது மனிதர்களாகிய நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தன் வாழ்வில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். ஆமைபோல் ஐந்து அடக்கல் என்பது குடும்ப வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் மட்டுமல்ல. கிறிஸ்தவ வாழ்வில் இதற்கு மேலே சற்று ஒரு படி மேல் சென்று கடவுளுக்காக வாழ்வதே முழுமையான வாழ்வாகிறது. முதன் முதலாய் இயேசு ஆண்டவரின் பெயரால் வந்தவர்கள் திருத்தூதர்கள். இந்த 12 சீடர்கள் இந்த உலகத்தையே கலக்கினார்கள்.

பொதுவாக மனிதர்களை ஊக்குவிக்க ஆமைகளின் தைரியம், வலிமை மற்றும் உறுதியை எடுத்துக் கூறும் வழக்கம் நம் மரபில் உண்டு. ஆமை முதுகில் கனமான ஓடுடன் நடந்து கொண்டே இருக்கும். வழிகளில் எந்த தடை வந்தாலும் முன்னேற வேண்டும். இது நமக்கு உறுதியுடன் வாழ்வதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் எந்த ஆபத்து வந்தாலும் தன்னைத்தானே சுருக்கி கொண்டு, ஓட்டில் மறைந்து கொள்ளும் பண்பு ஆமைக்கு உண்டு. அது போல இவ்வலக ஆபத்துகள், ஆசைகள் நம்மை அண்டவிடாமல் ஐம்புலன்களையும் அடக்கி வாழ்ந்தால் நரகத்தைப் பற்றிய பயம் நம்மை அண்டாது.

நாமும் உயிர்த்தெழுந்த இயேசுவோடு இணைந்து பயணிப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**-லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...